**விவசாயிகளின் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டம் - 2012**

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான விவசாயிகளின் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பவற்றினை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகிறது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.2.1 திட்டத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை**

விவசாயிகள் ஓய்வூதிய நிதியத்தின் மீதியானது கீழே காட்டப்பட்டவாறு 2006 ஆம் ஆண்டிற்கான ரூபா 2,003 மில்லியன் சாதக மீதியிலிருந்து மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 48,945.1 மில்லியன் எதிர்மறையான மீதிக்கு வீழ்ச்சியடைந்திருந்தது. நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகளின்படி, சகல நிதிகளும் 2010 ஆகஸ்ட் மாத இறுதியில் தீர்ந்துபோய்விட்டதுடன் அதன்பின்னர் மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவுகள் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையில் இருக்கின்ற வேறு நிதிகளிலிருந்து குறுகியகாலக் கடன்களைப் பெறுவதன்மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆகவே விவசாயிகள் ஓய்வூதிய திட்டத்தின் எதிர்காலத் தங்கியிருத்தல் அரசாங்க மானியங்களிலேயே மொத்தமாகத் தங்கியுள்ளது.

| **ஆண்டு** | **நிதியத்தின் மீதி** |
|---|---|
| | **ரூபா மில்** |
| 2006 | 2,003.7 |
| 2007 | 1,639.8 |
| 2008 | 1,404.8 |
| 2009 | 663.8 |
| 2010 | (40,536.7) |
| 2011 | (44,154.2) |
| 2012 | (48,945.1) |

### 1.2.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல்

பின்வரும் அவதானிப்புகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) எஸ்எல்எவ்ஆர்எஸ் 1 இன்படி நிதிக் கூற்றுக்களானது தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. முதலாவது தடவையாக இலங்கை கணக்கீட்டு நியமங்கள பின்பற்றியமை.

(ஆ) எல்கேஏஎஸ் 39 இன்படி, இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாயமான பெறுமதி, முதிர்ச்சி அடைந்தவை, கடன் மற்றும் பெறவேண்டியவைகள் மற்றும் விற்பனைக்காக கிடைத்தவை என்றவாறான நிதிக் கருவிகள் காட்டப்பட்டிருக்கவில்லை.

(இ) எஸ்எல்எவ்ஆர்எஸ் 07 இன்படி, நிதிக் கருவிகளுடன் தொடர்புபட்ட வெளிப்படுத்தல்கள் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) எல்கேஏஎஸ் 19 இன்படி, வரையறுத்த நலன்புரித் திட்டத்தின் கீழான கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கில் வரையறுத்த நலன்புரித் திட்டத்திற்காக காப்புறுதிக் கணிப்பீட்டு பெறுமதி மற்றும் அதன் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், ஊழியர் மற்றும் தொழில்கொள்வோனால் மேற்கொள்ளப்பட்ட பங்களிப்புகள் முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) ஓய்வூதிய பொறுப்புக்களின் இறுதி காப்புறுதிக் கணிப்பீட்டு மதிப்பாய்வு 2007 இல் செய்யப்பட்டிருந்தது. அதிலிருந்து, ஓய்வூதிய பொறுப்புக்களிற்காக காப்புறுதிக் கணிப்பீட்டு மதிப்பாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. எனவே, நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பொறுப்புக்களின் சாத்தியமானதன்மை கேள்விக்குரியதாகும்.

### 1.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(அ) அநுராதபுரம் மற்றும் பொலநறுவை மாவட்டங்களில் விவசாயிகளுக்கு செலுத்தப்பட்ட ரூபா 7,305,897 தொகையான ஓய்வூதியம் மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் ஓய்வூதிய பொறுப்பிலிருந்து கழிக்கப்பட்டிருக்கவில்லை. எனவே, நிதி நிலைமை கூற்றுத் திகதியிலுள்ளவாறான ஓய்வூதிய பொறுப்பு அதேதொகையால் அதிகரித்துக்காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 2012 ஆம் ஆண்டில் தபால் அலுவலக மீளெடுப்பு ஓய்வூதிய கொடுப்பனவுகளிற்கு செலுத்தப்பட்ட ரூபா 6,148,860 தொகையான தரகு, தரகாக கணக்கிடுவதற்குப் பதிலாக ஓய்வூதிய பொறுப்பிலிருந்து கழிக்கப்பட்டிருந்தது.

### 1.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்ட ரூபா 4,654,023 தொகையான பெறவேண்டிய கணக்குகளின் மொத்த மீதிகளில் ரூபா 2,111,885 அல்லது 45 சதவீதம் மாத்திரமே உரிய தொடர்புபட்ட பகுதியினரால் உறுதிப்படுத்தப்பட்டிருந்தன.

(ஆ) ரூபா 2,382,031 கூட்டுமொத்த தொகையான செலுத்தப்படவேண்டிய கணக்காய்வுக் கட்டணங்கள் நீண்டகாலமாகத் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(இ) திட்டத்தின் சகல நிதிகளும் தீர்ந்துபோனமையால் மீனவர்களின் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டத்திடமிருந்து ரூபா 553,014,955 மற்றும் கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதி சபையிடமிருந்து ரூபா 260,976,074 ஆகிய குறுகிய கால கடன்களை எடுப்பதன் மூலம் மாதாந்த ஓய்வூதிய கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தன. மேற்குறித்த கடன்கள் மற்றும் அவற்றின் மீதான வட்டிகள் 2013 மே 20 வரையிற்கூட தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.2.5 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விவசாயிகள் ஓய்வூதியம் மற்றும் சமூக நலன்புரித்திட்டத்தின் ரூபா 2,791,679 பெறுமதியான நாற்பத்து எட்டுக் காசோலைகள் மற்றும் ரூபா 7,152,249 பெறுமதியான வங்கி வரைவுகள் என்பன சபையின் 2 பணிப்பாளர்கள் மற்றும் ஒரு உதவிப் பணிப்பாளர் என்போரால் 2008 ஆம் ஆண்டில் மோசடியாக பயன்படுத்தப்பட்டிருந்தன. இது தொடர்பில் மேல் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டிருந்ததென சபையானது எனக்கு அறிவித்திருந்தது.

(ஆ) ரூபா 369,590 தொகையான பணத்தை மோசடியாக பயன்படுத்திய வெளிக்கள உத்தியோகத்தருக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு மீளாய்வாண்டின் போது தள்ளுபடி செய்யப்பட்டது. அவரிடமிருந்து ரூபா

100,000 தொகை மாத்திரம் பெறப்பட்டிருந்ததுடன் வழக்கு மூடப்பட்டுவிட்டன. ஆகவே மிகுதி ரூபா 269,590 அறவிட முடியாதிருந்ததுடன் கணக்குகளில் அவசியமான சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 1.2.6 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

கணக்குகளிலுள்ள பின்வரும் விடயங்களிற்கு 2013 மே 20 வரை ஆவணச்சான்றுகள் இன்மை காரணமாக கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியவில்லை.

| **விபரம்** | **தொகை**<br>**ரூபா** | **கிடைக்கப்பெறாத சான்றுகள்** |
|---|---|---|
| அநுராதபுரம் மற்றும் பொலநறுவை மாவட்டங்களிலுள்ள 936 விவசாயிகளிற்காக செய்யப்பட்ட ஓய்வுதிய கொடுப்பனவுகள் | 3,288,000 | ஓய்வூதிய கொடுப்பனவுகளின் விரிவான பட்டோலை |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டிற்கான திட்டத்தின் செயற்பாடுகள் விளைவித்திருந்த ரூபா 4,670,653,346 ஆன பற்றாக்குறையை முன்னைய ஆண்டிற்கான ரூபா 3,617,570,557 ஆன நேரொத்த பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் அது நிதிசார் விளைவுகளில் ரூபா 1,053,082,789 அல்லது 29 சதவீதத்தால் பற்றாக்குறையின் அதிகரிப்பைக் காட்டுகின்றது. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| | 2012<br>ரூபா | 2011<br>ரூபா | முரண் சதவீதம் |
|---|---|---|---|
| வட்டி வருமானம் | 2,702,921 | 1,566,195 | 72.6 |
| விவசாயிகள் பங்களிப்புகள் | 55,475,042 | 108,458,800 | (48.8) |
| ஓய்வூதியக் கொடுப்பனவுகள் | (1,380,677,601) | (1,226,744,103) | (12.5) |
| ஏனைய செயற்பாட்டுச் செலவினம் | (52,552,338) | (54,806,188) | 4.1 |
| செலவினத்திற்கு மேலான வருமானம் | (1,375,051,976) | (1,171,525,296) | (17.37) |
| அரசாங்க மானியம் | 8,232,560 | 664,855,487 | (98.8) |
| ஓய்வூதிய பொறுப்பு அதிகரிப்பு | (3,216,991,000) | (3,059,459,000) | (5.1) |
| அரசாங்க மானியத்தின் காலக்கழிவு | 1,320,949 | 1,227,701 | 7.6 |

| | | | |
|---|---|---|---|
| நிர்வாகத்திற்கான வருமானம் | 66,292,332 | 68,159,142 | (2.7) |
| நிர்வாக மற்றும் நிதிச் செலவினம் | (154,456,210) | (120,828,592) | (27.8) |
| ஆண்டிற்கான ஒட்டுமொத்தப் பற்றக்குறை | (4.670,653,346) | (3,617,570,557) | (29.11) |
| | --------------------- | ------------------------- | |

மேற்குறிப்பிட்ட விளைவுகளிற்கு பின்வருவன தாக்கமளித்திருந்தன.

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது வட்டி வருமானம் 72.6 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது விவசாயிகளுடைய பங்களிப்புகள் 48.8 சதவீதத்தால் குறைவடைந்திருந்தன.

(இ) ஐந்தொகை திகதியில் உள்ளவாறான விவசாயிகள் ஓய்வூதிய பொறுப்பு 2007 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட காப்புறுதிக் கணிப்பீட்டு மதிப்பாய்வை அடிப்படையாகக் கொண்டு எல்கேஏஎஸ் 37 இன்படி நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஓய்வூதிய பொறுப்பின் அதிகரிப்பு மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் ரூபா 3,216,991,000 ஆக காட்டப்பட்டிருந்ததுடன் நேரொத்த தொகைகள் மீள அமைக்கப்பட்டன.

(ஈ) மீளாய்வாண்டிற்கான ஓய்வூதியத்ததை செலுத்துவதற்கு ரூபா 8.23 மில்லியன் அரசாங்க மானியம் பெறப்பட்டிருந்தது. இது முன்னைய ஆண்டின் நேரொத்த தொகைகளுடன் ஒப்பிடும் போது 98.8 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

## 2.2 நிதிசார் விளைவுகள் மற்றும் நிதி நிலைமை என்பவற்றின் பகுப்பாய்வு ரீதியான மீளாய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசாங்க மானியங்களிலிருந்து நிர்வாகச் செலவினத்தின் ஒரு பகுதி மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் நிதியத்தின் நிதி நிலைமை ஆபத்தான நிலைமையிலேயே தொடர்ந்திருந்தது. நிதியத்தின் நிதிசார் விளைவுகள் கீழே காட்டப்பட்டவாறு 2008 இன் இறுதியில் உள்ள ரூபா 235 மில்லியன் பற்றாக்குறையிலிருந்து 2012 இல் ரூபா 4,671 மில்லியன் பற்றாக்குறையாக வீழ்ச்சியடைந்திருந்தது. அதன் பிரகாரம் விவசாயிகள் ஓய்வூதிய நிதியத்தின் சாத்தியத்தன்மை ஆபத்தான நிச்சயமற்ற தன்மையிலுள்ளது.

முன்னைய 5 ஆண்டுகளிற்கான நிதிசார் விளைவுகள் கீழே தரப்படுகின்றன.

| | 2012<br>ரூபா (000) | 2011<br>ரூபா (000) | 2010<br>ரூபா (000) | 2009<br>ரூபா (000) | 2008<br>ரூபா (000) |
|---|---|---|---|---|---|
| மொத்த வருமானம் | 61,148 | 115,434 | 170,898 | 306,607 | 431,209 |
| மொத்தச் செலவினம் | (1,587,686) | (1,402,379) | (1,195,110) | (1,103,779) | (951,623) |
| ஓய்வூதிய பொறுப்பின் அதிகரிப்பு | (3,059,459) | (2,938,033) | - | - | - |
| தேறிய மிகை/ (பற்றாக்குறை) | (4,743,529) | (4,346,404) | (3,962,245) | (797,172) | (520,414) |
| அரசாங்க மானியம் | 71,555 | 727,605 | 39,500 | 55,860 | 285,000 |
| அரசாங்க மானியத்தின் காலக்கழிவு | 1,321 | 1,228 | 1,477 | - | - |
| அரசாங்க மானியத்தின் பின்னர் .தேறிய மிகை/ (பற்றாக்குறை) | (4,670,653) | (3,617,571) | (3,921,268) | (741,312) | (235,414) |

(i) உறுப்பினர் பதிவு செய்வதற்கான மேம்பாட்டின் மீதான வருமானமானது 2008 முதல் 2012 வரையான காலப்பகுதியின் போது 85 சதவீதத்தால் படிப்படியாக வீழ்ச்சியடைந்திருந்தது. அதேநேரம் ஓய்வூதியத்திற்கு தகுதியுடைய விவசாயிகளின் எண்ணிக்கை அதிகரித்தமை மற்றும் திட்டத்திலிருந்து செய்யப்பட்ட மீளெடுப்புகள் காரணமாக, மொத்தச் செலவினமானது அதே காலப்பகுதியின் போது 67 சதவீதத்தால் மாத்திரம் அதிகரித்திருந்தது.

(ii) உண்மையான நிபந்தனைகளில் ஓய்வூதிய பொறுப்பு தாபித்தமை மற்றும் செலவின அதிகரிப்புக் காரணமாக அரசாங்க மானியத்திற்கு முன்னரான தேறிய மிகை 2008 முதல் 2012 வரையான காலத்தின் போது படிப்படியாக வீழ்ச்சியடைந்திருந்தது.

(ஆ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 4 ஆண்டுகளில் திட்டத்திற்காக விவசாயிகளிடமிருந்து சேகரிக்கப்பட்ட மொத்த பங்களிப்புகள் மற்றும் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் என்பன கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | பங்களிப்புகள் | ஓய்வூதியக் கொடுப்பனவு |
| --- | --- | --- |
| | ரூபா மில் | ரூபா மில் |
| 2008 | 163.1 | 809.1 |
| 2009 | 148.7 | 955.6 |
| 2010 | 136.7 | 1,044.7 |
| 2011 | 97.6 | 1,226.7 |
| 2012 | 49.6 | 1,380.7 |

(இ) முதலீடுகள் 2007 ஆம் ஆண்டிலிருந்து விரைவாக வீழ்ச்சியடைந்திருந்ததுடன் இதன் விளைவாக முதலீடுகளிலிருந்தான வருமானமும் கீழே காட்டப்பட்டவாறு 2012 ஆம் ஆண்டில் பாரியளவு வீழ்ச்சியைப் பதிவு செய்திருந்தது.

| ஆண்டு | ஆண்டின் இறுதியில் உள்ளவாறான முதலீடுகள் | ஆண்டிற்கான வட்டி வருமானம் |
| --- | --- | --- |
| | ரூபா மில் | ரூபா மில் |
| 2007 | 1,656.0 | 251.3 |
| 2008 | 1,256.1 | 243.9 |
| 2009 | 582.2 | 138.9 |
| 2010 | 3.5 | 14.9 |
| 2011 | 30.7 | 1.6 |
| 2012 | 12.4 | 2.7 |

மேற்குறித்த தகவல்களின்படி, முதலீடுகள் 2007 இல் இருந்த ரூபா 1,656 மில்லியனிலிருந்து 2012 ஆம் ஆண்டில் ரூபா 12.4 மில்லியன் அல்லது 99 சதவீதத்தால் குறைவடைந்திருந்ததுடன் வட்டி வருமானம் 2007 இல் இருந்த ரூபா 251.3 மில்லியனிலிருந்து 2012 ஆம் ஆண்டில் ரூபா 2.7 மில்லியன் அல்லது 98.92 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திட்டத்தின் நிதிகள் 2010 இல் பொறுப்பேற்கப்பட்டிருந்ததுடன் இதன்விளைவாக திட்டத்தின் நிதி நிலுவைகளின் அதிகரிப்பு காரணமாக உள் நுழைவு பதிவுகள் நிறுத்தப்பட்டிருந்தது. திட்டத்தின் செயற்பாடுகள் மீது இறுதி தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கவில்லை. ஆகவே, 2012 ஆம்

ஆண்டிற்காக விவசாயிகள் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலன்புரித் திட்டத்திற்காக செயல் நடவடிக்கைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது ரூபா 58,428,092 தொகையான இரண்டாவது மற்றும் அதற்குப் பின்னரான தவணைப் பணங்கள் சேகரிக்கப்பட்டிருந்தன.

(இ) மீளாய்வாண்டின் போது திட்டத்திற்கு எந்தவொரு விவசாயியும் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3.2 முகாமைத்துவ திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1992 இலிருந்து தேறாதவையாக இருக்கின்ற மூன்று வங்கிக் கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்ட 116 காசோலைகள் தொடர்பான ரூபா 1,179,624 தொகையான தேறாத வைப்புக்களின் பெறுமதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் பின்வருமாறு.

| கணக்கு இல | வைப்புச் செய்யப்பட்ட காலம் | காசோலைகளின் எண்ணிக்கை | பெறுமதி |
|---|---|---|---|
| | | | ரூபா |
| 100-150-112345 | 1992-2000 | 81 | 1,112,339 |
| 100-150-112347 | 1993-2012 | 07 | 40,650 |
| 100-150-112344 | 1993-1998 | 28 | 26,635 |
| | | 116 | 1,179,624 |

## 3.3 செயற்திட்டங்களிலுள்ள தாமதங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திட்டத்தின் பங்களிப்பாளர்களின் ஆளுக்குரிய தனிப்பட்ட கணக்குகளை கணனி மயப்படுத்துவதற்காக 1987 இலிருந்து ரூபா 21.5 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், 25 ஆண்டுகள் கடந்த பின்னரும் கூட கணக்குகள் கணனிமயப்படுத்தல் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவோ அல்லது 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் கணக்குகள் நாளது வரையாக்கப்பட்டோ இருக்கவில்லை. திட்டமானது விவசாயிகள் ஓய்வூதியம் மற்றும் சமூக நலன்புரித் திட்டத்திற்கான பங்களிப்புக்களின் கொடுப்பனவிற்கு

தகைமைபெற்ற பங்களிப்பாளர்களை நிர்ணயிப்பதற்கு போதிய தகவல்களை கொண்டிருக்கவில்லை. மாவட்ட அலுவலகங்களிலும் கூட பங்களிப்பாளர்களின் கணக்குகள் நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) விவசாயிகளின் ஓய்வூதியம் மற்றும் சமூக நலன்புரித் திட்டத்திற்கான புதிய கணனிமயப்படுத்தல் முறைமையொன்றை விருத்தி செய்வதற்காக 2008 ஆம் ஆண்டில் கொழும்பு பல்கலைக்கழகத்துடன் உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு இறுதிவரை அதில் ஏற்பட்ட செலவினம் ரூபா 5,479,120 ஆகும். உடன்படிக்கையின்படி, செயற்திட்டம் ஆறு மாதங்களிற்குள் பூர்த்தியாக்கப்பட வேண்டும், எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் இறுதியளவிலும் கூட அது பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின்படி வழங்கப்பட்ட எனது விரிவான அறிக்கை மூலம் சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணனிமயப்படுத்தப்பட்ட முறைமை

(ஆ) நிதி முகாமைத்துவம்

(இ) ஓய்வூதியக் கொடுப்பனவுகளும் செலுத்தப்படாத ஓய்வூதியங்களும்